DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 128/2022 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 5 |
| Name | கார்த்திக் |
| Father / Husband Name | கிருஷ்ணன் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 11th July 2023.

---

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கை பேரணிப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகின்றேன். நான் ஒக்கூர் அண்ணாநகரில் மளிகைக்கடை வைத்து நடத்தி வருகின்றேன். ஆஜர் எதிரியைத் தெரியும் விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநர்.

2) கடந்த 03.11.2021ம் தேதி மாலை 06.00 மணியளவில் நான் அண்ணாநகர் பஸ் ஸ்டாப் அருகில் நானும், குமார் என்பவரும் நின்று கொண்டிருந்த போது மானாமதுரை பைபாஸ் ரோட்டில் ஒக்கூர் அண்ணாநகர் நடுநிலைப்பள்ளி அருகே ஒரு Honda Activa இருசக்கர வாகனத்தில் ஒரு பெண்ணும், இரண்டு சிறுபிள்ளைகளும் வந்து கொண்டிருந்த போது பின்னால் வந்த TN 1265 அரசு

பேருந்தை ஆஜர் எதிரி அதிவேகமாக ஓட்டி வந்து Honda Activa வை ஓட்டி வந்த வினோதினி மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே வினோதினி மூளை சிதறி இறந்துவிட்டார் மற்றும் வினோதினியின் மகனான லிங்கேஸ்வரன் என்பவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அவருடன் வந்த மற்றொரு மகனுக்கு காலில் பலத்த அடி ஏற்பட்டது.

3) நானும், அதை பார்த்த குமார், சுப்புராஜ் ஆகியோர்கள் சேர்ந்து சிவகங்கை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். மேற்படி விபத்து குறித்து சுப்புராஜ் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் தெரியும். மேற்படி விபத்திற்கும், வினோதினி மற்றும் லிங்கேஸ்வரனின் இறப்பிற்கும், கோகுல்ராஜின் காயத்திற்கும் அரசு பேருந்தை ஆஜர் எதிரி அதிவேகமாக ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியது தான் காரணம் . போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1) செருவலிங்கம் மகன் குமார் சுப்புராஜாவின் தம்பி என்றால் சரிதான். நான் விபத்தில் இறந்து போன வினோதினியின் உறவினர் என்றால் சரியல்ல ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். சம்பவத்தன்று சம்பவ சமயத்தில் ஒக்கூர் அண்ணா நகர் பஸ் ஸ்டாப்பில் ஆட்களை இறக்கிவிட்டு அந்த பேருந்து வந்துகொண்டிருந்தது என்றால் சரியல்ல அந்த ஸ்டாப்பில் அந்த பேருந்து நின்றதை நான் பார்க்கவில்லை.

2) அண்ணாநகர் பேருந்து நிறுத்தத்தில் திருப்பத்தூரில் இருந்து வரும் பேருந்துகள் அனைத்தும் நின்று தான் செல்லும் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் தெற்கு பக்கத்திலிருந்து வடக்கு நோக்கி டாடா ஏசி வந்ததை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. வினோதினியுடன் வாகனத்தில் யார் உடன் வந்தார்கள் என்றால் அவருடைய இரு மகன்கள் வந்தார்கள். வேறு யாரும் வேறு வாகனத்தில் வந்தார்களா என்றால் அதை நான் கவனிக்கவில்லை.

3) சம்பவ சமயத்தில் பேருந்து பயணிகளை இறக்கிவிட்டு மெதுவாக வந்து கொண்டிருந்தது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபர் இருசக்கர வாகனத்தை பஸ் ஸ்டாப்புக்கு பின்புறம் வந்து கொண்டிருந்தவர்பேருந்தை முந்த வந்த போது எதிரே வந்த டாடா ஏசி வாகனம் மோதிவிட்டு சென்றது என்றும் விபத்து எதிரியின் பேருந்தால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

4) **நானும், குமாரும் நண்பர் என்றால் சரிதான். விபத்தில் இறந்தவரும், காயம்பட்டவரும் குமாரின் உறவினர் என்பதால் குமார் கேட்டுக்கொண்டதற்கிணங்க விபத்தை நேரடியாக பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.**

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 11.07.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**